**இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம் -2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம 08 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பெறுகைகள் தொடர்பாக நிச்சயமற்ற தன்மையுடன் 3 வருடங்கள் மற்றும் 10 வருடங்களுக்கு இடையே காலவீச்சில் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 31,324,469 தொகை பெறுமதிக்கான 20 கடன் மீதிகளுக்காக ஐயக்கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், கடன்பட்டோர் எவரென இனங்காண முடியாத கூட்டுப்பெறுமதி ரூபா 25,925,739 தொகைக்கான 3 கடன் மீதிகளும் அந்த வியாபாரக் கடன்பட்டோருள் உட்படுத்தப்பட்டிருந்தது. | ஐயக்கடன் ஒதுக்கம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கணக்கீட்டு நியமங்களின் படி ஐயக்கடன் ஒதுக்குவதற்காக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளும் படி அறிவுரை வழங்கப்பட்டது என. | நியமத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனங்கள் பொறித்தொகுதி உபகரண விடயங்களின் நியாயமான பெறுமதியில் மாற்றங்கள் மீது மீள்மதிப்பீடு ஒன்று தேவைப்படின் முழுமையாக பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டுள்ள ஆனால் மற்றும் தற்போது ஓட்டநிலையில் காணப்படும் ரூபா 4,463,964 தொகை கூட்டுப் பெறுமதியுடைய 02 வாகனங்கள் வரலாற்றுக் கிரயத்தில் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளதுடன் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 03 வாகனங்களில் மோட்டார் சைக்கிள் ஒன்று ஓட்ட நிலையில் காணப்படாமையால் அதனை அகற்றுவதற்காக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் மீதியான மோட்டார் சைக்கிள் மற்றும் கப் வண்டியினை எதிர்காலத்தில் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ள சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதிக்கு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் பிரகாரம் தொடர்புடைய தரப்பினரிடம் பெற வேண்டிய மீதிகளை வகைப்படுத்தி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் லங்கா சீமெந்துக் கம்பனியின் மொத்த மூலதனத்தில் 62.45 சதவீதத்திற்கான பங்குகளில் முதலீடு செய்திருந்ததுடன் அந்த கம்பனியில் இருந்து அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 1,940,555 இற்கான மீதிகள் வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் உட்படுத்தப்பட்டிருந்தது. (அந்த மீதியுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் தன்மை மற்றும் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.) | தொடர்புடைய தரப்பினருக்கு சீமெந்து வழங்குதல் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த இந்த மீதியுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கலின் தன்மை மற்றும் ஏனைய தகவல்கள் எதிர்காலத்தில் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நியமத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 40 இன் 05 ஆம் பந்தியின் பிரகாரம் குத்தகை வருமானம் பெறப்படும் ரூபா 735,000,000 தொகைக்கான கொள்ளுபிட்டியில் அமைந்துள்ள காணி முதலீட்டு ஆதனம் என வேறாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் ஆதனங்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | உயர்ந்த வியாபார பெறுமதியுடைய கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள காணியில் முதலீட்டுச் செயற்திட்டம் ஏதும் செயற்படுத்தப்பட்டிருக்காமையால் முதலீட்டுச் செயற்திட்டம் ஒன்று செயற்படுத்தும் வரை இந்த காணி ஆதனங்கள் பொறித்தொகுதி உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது என. | முதலீட்டு ஆதனம் ஒன்றென இனங் கண்டிருந்தமையால் நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மூன்று கடன்பட்டோரினால் வழங்கியிருந்த மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளின் படி ரூபா 381,966 இற்கான மீதியொன்று கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டியதென காட்டப்பட்டிருந்த போதிலும் அதனை நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தியிருக்கவில்லை.<br>ஆதேபோல் இரண்டு கடன்பட்டோர் தொடர்பாக ரூபா 2,831,142 இற்கான மீதியொன்று பெறவேண்டியவை என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழின் படி அவ்வாறான மீதியொன்று காணப்படவில்லை. | அனைத்து கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளுக்காக மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது எனவும், அனைத்து கடிதங்கள் தொடர்பாகவும் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பியிருக்கவில்லை என. | கடன்மீதிகளுக்காக மீதிகளை உறுப்படுத்துதல்கள் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | காங்கேசன்துறையில் அமைந்துள்ள கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 02 எண்ணெய் தாங்கிகளும் மற்றும் குழாய் முறைமை லங்கா பெற்றோலிய மொத்த களஞ்சியப் புறப்பகுதி அரச கம்பனிக்கு குத்தகைக்கு கொடுத்தமை தொடர்பாக 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய குத்தகைத் தொகை ரூபா 16,680,000 தொகை (நிதிக் கூற்றுக்களில்) குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட்ட ஆண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய பெறுமதியை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியான பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனத்தினால் லங்கா சீமெந்துக் கம்பனியின் ரூபா 10 பங்குகள் 108,361,891 இற்காக அதாவது கூட்டுத்தொகை ரூபா 1,083,618,910 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி கூட்டுத்தாபனத்தினால் நிருவகிக்கப்படும் கம்பனி ஒன்றான லங்கா சீமெந்துக் கம்பனியின் பங்கு மூலதனத்தின் 62.45 வீதம் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக இருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டிற்காக ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள் தயாரித்திருக்கவில்லை. | பதில் வழங்கியிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமங்களின் படி ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

02 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி மற்றும் நேரொத்த அறிக்கைகளின் படி பெறுமதிகளிடையே ரூபா 6,118,336 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன், குறிப்பிட்ட வித்தியாசங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.6 பெறவேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 28,274,104 தொகைக்கான வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத் தொகையில் ரூபா 25,686,717 தொகை அதாவது 91% உம் 03 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட | பதில் வழங்கியிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய செலவுகளின் சரியான தன்மையினை கண்டறிந்து செலுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலவீச்சில் காணப்பட்ட பழைய மீதிகளாகும்.<br>அட்டுரு செலவுகளின் கீழ் காணப்பட்ட இனங்கண்டிருந்த ரூபா 1,177,768 இற்கான செலுத்த வேண்டிய மீதியொன்று, பல்வேறு தரப்பினருக்கு செலுத்த வேண்டியவை என இனங்கண்டிருந்த ரூபா 2,037,959 இற்கான மீதியொன்று மற்றும் 03 வருடங்கள் மற்றும் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட பழைய செலுத்த வேண்டிய ரூபா 3,090,311 தொகைக்கான கடன்கொடுத்தோர் மீதிகள் முன்கொண்டுவரப்பட்டு காணப்பட்டதுடன், அந்த கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 03 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் முதல் தொடர்ச்சியாக காணப்படும் செலுத்த வேண்டிய செலவுகளில் ரூபா 14,374,689 தொகை அதாவது 56 சதவீதம் அளவு, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு தீர்க்க வேண்டிய தொகை ஒன்று என நிதிக் கூற்றுக்களில் தொடர்ந்தும் காட்டப்பட்டிருந்தது. அந்த மீதிகளுக்காக குறிப்பிட்ட நிறுவனங்களிடம் உறுதிப்படுத்தல் பெற்றுக்கொண்டு தீர்த்துக்கொள்வதற்கு கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கியிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடி மீதிகளை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 ஜூன் 02 திகதிய இலக்கம் பீஈடீ 12 அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 9.4.2 | மனிதவள முகாமைத்துவம் தொடர்பாக சட்டங்கள் விதிகள் அடங்கிய நடவடிக்கை முறை தொடர்பான கைநூலிற்கான திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தினால் | கூட்டுத்தாபனத்தின் மனிதவள முகாமைத்துவம் தொடர்பாக சட்டங்கள் விதிகள் அடங்கிய நடவடிக்கை முறை தொடர்பான கைநூல் 1976 இல் தயாரிக்கப்பட்டிருந்தது. எனவும் இந்த | சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கைநூலுக்காக 2003 ஆண்டில் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையின் படி அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை என. | |
| (ஆ) | 2014 பெப்ரவரி 14 திகதிய 01/2014 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை | அடுத்த நிதியாண்டில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் ஒன்று உள்ளடங்கியிருக்காததுடன், 2016 ஆண்டு முதல் கூட்டுத்தாபனத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்று செயற்பட்டிருக்கவில்லை. | சுயவிருப்பு நட்ட ஈட்டு முறைமை செயற்படுத்தப்பட்ட பின்னர் அப் பதவிக்காக புதிதாக ஆட்சேர்ப்பு ஒன்று மேற்கொள்வதற்கு முடியாது என. | உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 39,416,231 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 39,349,905 தொகை ஆகும். அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 66,326 இற்கான அதிகரிப்பு ஒன்று அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1994 திசெம்பர் 06 திகதி கூட்டுத்தாபனத்தினால் லங்கா சீமெந்துக் கம்பனியின் பங்குகளில், 108,361,891 பங்குகள், பங்கொன்று ரூபா 10 இற்கான பெயரளவுப் பெறுமதிக்கு கொள்வனவு செய்து கம்பனியின் பங்கு மூலதனத்தில் 62.45 சதவீத உரிமையொன்று பெற்றிருந்த போதிலும் பங்குகள் கொள்வனவு செய்யப்பட்ட 1994 ஆண்டு முதல் 2020 திசெம்பர் 31 வரை முதலீட்டிற்காக நலன்கள் ஏதும் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | 1990 ஜூன் மாதம் முதல் வட மாகாணத்தில் காணப்பட்ட யுத்த சூழ்நிலையின் காரணமாக காங்கேசன்துறையில் அமைந்துள்ள அனைத்துச் தொழிற்சாலைகளினதும் செயற்பாட்டு விடயங்கள் நிறுத்தப்பட்டமையால் முதலீடுகளுக்கான நலன்கள் கிடைக்கப் பெறாமைக்கு அடிப்படைக் காரணமாகும் என. | முதலீட்டுக்காக கிடைக்க வேண்டிய பங்கிலாபத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மகவெலி மெரின் சீமெந்துக் கம்பனியின் ரூபா 10 சாதாரண பங்குகள் 480,000 இற்காக ரூபா 6,400,000 தொகைக்கான முதலீட்டுக்காக 2014 ஆண்டின் பின்னர் பங்கிலாபம் ஏதும் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | கடந்த பல வருடங்களாக பங்கிலாபம் விநியோகிக்கக் கூடிய வருமானம் ஒன்றினை இந்தக் கம்பனி உழைத்திருக்கவில்லை என வெளியிடப்பட்டிருந்தது என. | முதலீடுகளை ஆக்கபூர்வமாக ஈடுபடுத்த வேண்டும். |
| (இ) | கங்கேசந்துறையில் அமைந்துள்ள கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 02 எண்ணெய் தாங்கிகள் மற்றும் குழாய் முறைமை லங்கா பெற்றோலிய மொத்தக் களஞ்சியப் புறப்பகுதி அரச கம்பனிக்கு எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளாமல் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 22 திகதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் 2010 ஆண்டு முதல் 2020 வரை ரூபா 168,000,000 இற்கான தொகையொன்று கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டும் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. குத்தகை அறவீடு செய்வதற்காக HO/1/5 – 2020 ஜனவரி 24 திகதி மற்றும் HO/1/5 – 2020 ஜுன் 30 திகதிய கடிதங்களின் மூலம் கூட்டுத்தாபனத்தினால் வரிசை அமைச்சிற்கு அறிவித்திருந்த போதிலும் இதுவரை அந்தப் பணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வரிசை அமைச்சின் தலைமையில் இந்தப் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக கலந்துரையாடல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என. | இந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கும் எழுத்துமூல உடன்படிக்கையின் படி எண்ணெய் தாங்கிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் ரூபா 1,200,000 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்த காலி உனவடுன கெஸ்பேபான என்ற காணியில் ஹபராதுவ பிரதேச செயலாளரினால் சுனாமியால் சேதமடைந்த வீடுகளை மீண்டும் நிர்மாணிப்பதற்காக தனதாக்கியிருந்தது. இந்தக் காணியை பிரதேச செயலாளருக்கு | இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காலி, தல்பேயில் அமைந்துள்ள காணி சுனாமியால் இடம் பெயர்ந்த மக்களுக்காக விஷேட வீடமைப்புச் செயற்திட்டமொன்று அங்கு செயற்படுத்துவதற்காக அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டதுடன், அந்த காணிக்காக நட்டஈடு பெற்றுக்கொள்வதற்காக | கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய நட்டஈட்டினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரித்தாக்கி வதிவோருக்கு காணி உறுதிகள் வழங்குவதற்காக மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு நட்டஈடு வழங்குவதற்காக பிரதேச செயலாளரினால் வழக்கொன்று தாக்கல் செய்திருந்த போதும் நட்டஈட்டுத் தொகை ஏதும் இதுவரை கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | பிரதேச செயலாளரினால் வழக்கு இலக்கம் LA 643 கொண்ட வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், அந்த வழக்கிற்காக புதிய பணிப்பாளர் சபையினால் 2021 ஆண்டின் மார்ச் மாதம் முதனிலை கையொப்பம் இடப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்தது என. | |
| (உ) | 1967 ஜூலை 12 திகதிய இலக்கம் 14, 756/7 கொண்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 89.7 பெர்ச்சஸ் கொண்ட கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள காணி 2017 ஆண்டில் ரூபா 735,000,000 இற்காக பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த காணியை அபிவிருத்திச் செயற்திட்டம் ஒன்றிற்காக பயன்படுத்தி உயர்ந்த வருமானம் ஒன்றினை உழைத்தல் கூட்டுத்தாபத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்த போதிலும் அதற்குப் புறம்பாக இந்தக் காணியை வாகனங்கள் நிறுத்துவதற்காக வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்கான நிறுவனங்களை தெரிவு செய்யும் போது 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவை பந்தி 1.2 இற்கு புறம்பாக கேள்வி நடைமுறை கடைபிடிக்காமல் 07 பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனங்களுடன் எழுத்துமூல உடன்படிக்கைகள் கூட்டுத்தாபனம் மேற்கொண்டிருக்கவில்லை. 2017 ஆண்டின் போது இந்தக் காணியை அரசாங்க வங்கியொன்றில் ஈடு வைத்து பெற்றிருந்த ரூபா 97,700,000 இற்கான கடன் தொகையில் 2020 திசெம்பர் 31 திகதி அளவில் மேலும் செலுத்துவதற்கு இருந்த கடன் தொகை ரூபா 67,700,000 தொகையாக காணப்பட்டதுடன் இதுவரை செலுத்தியிருந்த மொத்த | நாட்டில் தற்போது காணப்படும் நிலைமையின் காரணமாக தகைமையுடைய முதலீட்டாளர் ஒருவர் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்ததென மற்றும் தகைமையுடைய முதலீட்டாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளும் வரை இந்தக் காணியை சுத்தமாக வைத்திருத்தல் மாகாணசாபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டியிருந்தமையால் 03 மாத குறுகிய காலத்திற்காக நிறுவனங்களுக்கு அங்கீகாரம் தற்காலிக அடிப்படையில் வாகனங்கள் நிறுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் அது முதலீட்டுச் செயற்திட்டம் ஒன்று அல்ல என. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஆதனங்களை ஆக்கபூர்வமான முதலீடுகளுக்காக ஈடுபடுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வட்டி ரூபா 47,870,613 தொகையாக காணப்பட்டது. 2020 ஆண்டிற்காக செலுத்தியிருந்த வருடாந்த வட்டி ரூபா 7,452,517 தொகை எனினும், வாகனங்கள் நிறுத்துவதன் மூலம் ஆண்டின் போது கிடைத்திருந்த வாடகை வருமானம் ரூபா 4,424,070 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் மிகவும் உயர்ந்த வாணிப பெறுமதியுடைய பிரதேசத்தில் காணப்படும் இவ்வாறான ஆதனம் ஒன்றினை ஆக்கபூர்வமான முதலீட்டொன்றிற்காக ஈடுபடுத்துவதற்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஊ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காங்கேசன்துறைக் காணியில் 2018 ஆண்டின் போது தோண்டுதல் மேற்கொள்ளப்பட்டு குவிக்கப்பட்டிருந்த 28,750 கன மீற்றர் சுண்ணாம்புக் கல் இருப்பொன்றில் கணிசமான அளவு குறிப்பிட்ட சிலரினால் அகற்றப்பட்டிருந்ததென கூட்டுத்தாபனத்தினால் பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதென குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த சுண்ணாம்புக் கல் இருப்பு பாதுகாப்பற்ற முறையில் சுமார் 03 வருட காலம் காணப்பட்ட போதும் அதனை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் மற்றும் பாதுகாத்துக் கொள்வதற்காக கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த சுண்ணாம்புக் கல் இருப்பு எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ள செயற்திட்டம் ஒன்றிற்காக பயன்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்பட்டுள்ளது என. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான இந்த சுண்ணாம்புக் கல் இருப்பின் பெறுமதியை ஆக்கபூர்வமாக பயன்படுத்தி பொருளாதார இலாபம் உழைக்கக் கூடிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், இருப்பினை கணக்கீடு செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு 62 சதவீத பங்கொன்று உரிமையாக இருக்கும் லங்கா சீமெந்துக் கம்பனி ஆகிய 02 நிறுவனங்களுக்கு சொந்தமான காங்கேசன்துறை சீமெந்துச் தொழிற்சாலையின் இயந்திர உபகரணங்களின் பகுதிகளை பழுதடைந்த இரும்பு என அப்புறப்படுத்துவதற்காக இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் அல்லது கம்பனியின் அங்கீகாரம | ஜனாதிபதி விசாரணை அறிக்கையின் படி சிவில் வழக்கொன்று தாக்கல் செய்து பணத்தை அறவீடு செய்யும் படி அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும். மற்றும் வரிசை அமைச்சு மற்றும் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய பாதுகாப்பு அமைச்சினால் நடாத்தப்பட்ட கூட்டத்தில் சிவில் | கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டியதுடன், நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| இன்றி இராணுவத்தினால் டென்டர் மூலம் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன், கேள்விதாரரினால் உடன்படிக்கை காலப் பகுதியில் அகற்றப்பட்டிருந்த பழுதடைந்த இரும்புகளுக்காக இராணுவத்தினால் சுமார் ரூபா 75 மில்லியன் அறவீடு செய்திருந்தது. அந்தத் தொகையில் ரூபா 20 மில்லியன் சீமெந்துக் கம்பனிக்கு 2016 ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. மீதியாகிய ரூபா 55 மில்லியன் தொகை இதுவரை கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருக்கவில்லை. | வழக்கொன்று தாக்கல் செய்யும் நடவடிக்கை பாதுகாப்பு அமைச்சினால் ஏற்றுக் கொண்டதாக வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டது என. | |

## 3.2 கருத்து முரண்பாட்டுத் தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 96/1900/111/135 இலக்க மற்றும் 1996 ஆகஸ்ட் 21 திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான அருவக்காலுவில் அமைந்துள்ள சுண்ணாம்புக்கல் படிவு அமைந்துள்ள 5140 ஏக்கர் காணி 50 வருட காலத்திற்காக குத்தகைக்கு கொடுப்பதற்கு புத்தளம் சீமெந்துக் கம்பனி (தற்போது சியெம் சிடி சிமெந்து (லங்கா) கம்பனி) உடன் 1993 திசெம்பர் 29 திகதி உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது. குறிப்பிட்ட உடன்படிக்கையின் குத்தகைத் தொகை வருடாந்தம் அதிகரிப்பதற்கான நிபந்தனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், ரூபா 11,500,000 இற்கான நிலையான தொகையொன்று வருடாந்த தவணைப் பணமாக தீர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக 1993 முதல் 2018 ஆண்டு வரை கூட்டுத்தாபனம் பாரிய வருமானம் ஒன்றை இழந்துள்ளது. 2019 நவம்பர் 07 திகதி கையொப்பமிடப்பட்ட 268 கொண்ட மேலதிக உடன்படிக்கை மூலம் குத்தகை அதிகரிக்கும் சதவீதம் 12 சதவீதம் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 1993 முதல் 2018 வரையான காலப்பகுதிக்கான குத்தகை தொகை | இது தொடர்பாக வரிசை அமைச்சிற்கு அறிவித்த பின்னர் நடைபெற்றுள்ள நிதி மோசடி தொடர்பாக 2020.06.25 திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டு அம் முறைப்பாட்டுக்காக இதுவரை விசாரணைகள் நடாத்தப்பட்டு வருகின்றது எனவும் மற்றும் விசாரணை தாமதமடையும் காரணத்தை அறிவிப்பதற்காக 2021 ஆண்டின் ஜூலை மாதம் பொலிஸ் மா அதிபர் சந்திக்கப்பட்டது எனவும். | விசாரணைகளை விரைவாக பூர்த்தி செய்து புதிய உடன்படிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். |

அதிகரிப்பு தொடர்பாக இணைக்கமொன்றுக்கு ஏட்டியிருக்கவில்லை. 2019 ஆண்டு முதல் வருடாந்த குத்தகை 319,118 அமெரிக்கா டொலர்கள் என கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும் மேலதிக குத்தகை உடன்படிக்கைக்காக நட்டமா அதிபரின் அங்கீகாரம் இவ்வறிக்கைத் திகதி வரை வழங்கியிருக்கவில்லை.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 மார்ச் 08 திகதிய 2016/2 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 பிரிவின் பிரகாரம் சுய விருப்பத்துடன் ஓய்வு பெறும் திட்டம் செயற்படுத்தப்பட்ட பின்னர் தற்போது காணப்படும் பதவியணிக்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றிருக்காததுடன், 07 பிரிவின் பிரகாரம் பதவியணி ஆட்சேர்ப்பு அல்லது மீண்டும் ஏற்படுத்துதல் மேற்கொள்ளப்படக்கூடாது இருந்த போதிலும் அதற்கு முரணாக நாளாந்த அடிப்படையில் மற்றும் சேவை உடன்படிக்கை மீது மூன்று ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. 2016 நவம்பர் 10 திகதிய PE/RES/VRS – 2016 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆதனங்கள், இயந்திர உபகரணங்களை பாதுகாப்பதற்கு மற்றும் பராமரிப்பதற்காக நட்டஈடு பெற்றிருக்காத ஊழியர்களை பயன்படுத்துவதற்கு முடியுமாக இருந்த போதிலும் நாளாந்த அடிப்படையில் மற்றும் சேவை உடன்படிக்கை அடிப்படையில் ஊழியர்களை ஈடுபடுத்தியிருத்தல் தொடர்பாக அமைச்சின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | பதில் வழங்கியிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 14 திகதிய 01/2014 இலக்கம் கொண்ட பொதுநிதிச் சுற்றறிக்யையின் பிரிவு 5(1)(ஈ) பிரகாரம் தமது வியாபார அலுவல்களை நீண்ட கால தூர நோக்குடன் முகாமைத்துவம் செய்ய வேண்டியதுடன், உத்தேசித்த இலக்குகளை நெருங்கக் கூடியவாறு இலக்குகளை நிறுவுதல் மற்றும் அடைந்துகொள்வதின் பொறுப்புக்களை செயற்பாட்டு மட்டம் வரை பகிரப்பட வேண்டும் என காட்டப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தில் அவ்வவ் ஆண்டுகளின் போது நெருங்குவதற்காக எதிர்ப்பார்த்த உத்தேச இலக்குகள் தெளிவாக காட்டப்பட்டிருக்காததுடன், அதற்காக பொறுப்புகளை பகிர்ந்தளித்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உத்தேச இலக்குகள் தொடர்பாக பொறுப்புகளை பகிர்ந்தளிக்கும் பதிவேடொன்று எதிர்காலத்தில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் |